**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**

O.S 234/2018

வா.சா.1 பத்மா

| | |
|---|---|
| Name | : பத்மா |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 01.09.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்.

நான் இந்த வழக்கில் வாதி. நான் என்னுடைய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 11.08.2017 ம் தேதி வழக்கு தொகுப்புரை அட்டவணைச் சொத்தை பொறுத்து நானும், காலஞ்சென்ற கிருஷ்ணன் அவர்களின் பொது அதிகார பெற்ற முகவர் மகாலெட்சுமியும் பிறப்பித்து கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணம் அசல் வா.சா.ஆ 1. வழக்கு தொகுப்புரை அட்டவணை சொத்தை பொறுத்து காலஞ்சென்ற கிருஷ்ணன் அவரது பொது அதிகாரம் பெற்ற முகவராக மகாலெட்சுமி அவர்களை நியமனம் செய்து எழுதிக்கொடுத்த பதிவு பெற்ற பொது அதிகார ஆவணம் அசல் வா.சா.ஆ 2. 5.11.1984 ம் தேதியில் திருநெல்வேலி ஆதி திராவிட நலத்துறையின் தனி வட்ட ஆட்சியாளர் அவர்களால் வழங்கப்பட்ட

நிலத்தை ஒப்படை செய்வத விசயமாய் பிறப்பிக்கப்படும் உத்தரவின் நமூனாவின் உண்மை நகல் வா.சா.ஆ 3. 19.12.16 ம்தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ 4. 20.12.16 ம் தேதி பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ 5. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.